(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 71.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2023 நவம்பர் 09, வியாழக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

1317/2023

கௌரவ மொஹமட் முஸம்மில்,— நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கையில் தற்போது இயங்கி வருகின்ற காதி நீதிமன்றங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) காதி நீதிமன்றங்களினால் வழங்கப்பட்ட தீர்ப்புகளுக்கு அமைவாக 2015ஆம் ஆண்டு முதல் இது வரை இடம்பெற்றுள்ள விவாகரத்துகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) காதி நீதிமன்றங்களில் கடமையாற்றும் 60 வயதைத் தாண்டிய காதிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) பட்டம் பெற்றுள்ள காதிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(v) காதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

1464/2023

கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தற்போது அச் சங்கங்களில் உள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) ஆகக் கூடிய மீனவர் கூட்டுறவுச் சங்கங்களைக் கொண்டுள்ள மாவட்டம் யாதென்பதையும்;

(iv) மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை ஊக்குவிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1512/2023

கௌரவ கோகிலா குணவர்தன,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் அரச நிறுவனங்களில் காணப்படும் வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களில் கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளில் காணப்படும் வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அரசாங்க நிறுவனங்களுக்கு வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாகனங்களுக்காக வருடாந்தம் செலுத்தப்படும் வாடகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1550/2023

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கையில் கறுவா செய்கையாளர்கள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள கறுவா கன்றுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) கறுவா செய்கையாளரொருவருக்கு வழங்கப்பட்டுள்ள கறுவா கன்றுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி கறுவா கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கறுவா கன்றுகளுக்கு மேலதிகமாக கறுவா செய்கையாளர்களுக்கு வழங்கப்படும் இதர வசதிகள் யாவை என்பதையும்;

(ii) 2019 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை கறுவா செய்கையை ஊக்குவிப்பதற்கு செலவிடப்பட்டுள்ள தொகை ஒவ்வொரு வருட வாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

1586/2023

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தில் அடிக்கடி வெள்ள நிலைமை ஏற்படுகின்றதென்பதையும்;

(ii) வருடத்திற்கு இரண்டு மூன்று தடவைகள் வெள்ளத்தில் மூழ்கும் பிரதேசங்கள் அம்மாவட்டத்தில் உள்ளதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) களுத்துறை மாவட்டத்தில் வெள்ளம் ஏற்படுவதைக் கட்டுப்படுத்துவதற்காக பின்பற்றப்படும் வழிமுறை யாது;

(ii) மேற்படி மாவட்டத்தில் வெள்ளக் கட்டுப்பாட்டிற்காக இன்றளவில் தயாரிக்கப்பட்டுள்ள திட்டங்கள் யாவை;

(iii) மேற்படி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

1718/2023

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இந்நாட்டுக்குக் கிடைத்த வெளிநாட்டு பணவனுப்பல்களின் பெறுமதி ஒவ்வொரு ஆண்டின் பிரகாரம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) இப்பெறுமதியானது மொத்த அந்நியச் செலாவணி ஈட்டல்களின் சதவீதமாக மேற்படி ஒவ்வொரு ஆண்டின் பிரகாரம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) இலங்கைக்கான வெளிநாட்டு பணவனுப்பல்கள் சட்டபூர்வமான வழிமுறைகள் ஊடாக மேற்கொள்ளப்படுவதனை ஊக்குவிப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

2020/2023

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை துறைமுக அதிகாரசபையின் கீழ் மஹபொல பயிற்சி நிறுவகம் (மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கலாசாலை) இயங்கிவருகின்றது என்பதை அறிவாரா;

(ii) மேற்படி நிறுவகத்தினால் தற்போது நடாத்தப்பட்டு வருகின்ற பாடநெறிகளின் எண்ணிக்கை யாது;

(iii) அவ் ஒவ்வொரு பாடநெறிகளும் யாவையென்பதையும்;

(iv) இலங்கையின் எதிர்கால பொருளாதார அபிவிருத்திக்கு மேற்படி நிறுவகம் எவ்வாறு பயன்படுத்தப்படும்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

2397/2023

கௌரவ இஷாக் ரஹுமான்,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள அரசாங்க நெசவுக் கைத்தொழில் நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி நிலையங்களில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை யாது;

(iii) நெசவு உற்பத்திகள் பின்னடைந்துள்ளமையை ஏற்றுக்கொள்வாரா;

(iv) நெசவு உற்பத்திகளை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(v) அவற்றை நடைமுறைப்படுத்துவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

2552/2023

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 60 வயதைப் பூர்த்தி செய்ததன் அடிப்படையில் 2022.12.31 ஆம் திகதியில் ஓய்வுபெறச் செய்யப்பட்ட அரசாங்க ஆசிரியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அதிக எண்ணிக்கையிலான ஆசிரியர்களை ஒரே தடவையில் ஓய்வுபெறச் செய்ததன் காரணமாக அரசாங்க பாடசாலை முறைமை செயலிழக்கும் அபாயம் காணப்படுகின்றதா என்பதையும்;

(iii) மேற்கூறப்பட்டவாறு ஓய்வுபெறச் செய்யப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

2883/2023

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2022 ஆம் ஆண்டு இடைக்கால வரவு செலவுத்திட்டத்தின் மூலம் கால்நடை அபிவிருத்தியின் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட நிதி ஒதுக்கீடு எவ்வளவு என்பதையும்;

(ii) அதிலிருந்து பயன்படுத்தப்பட்ட மற்றும் பயன்படுத்தப்படாத நிதி ஒதுக்கீடு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) இலங்கையில் கோழி இறைச்சி உற்பத்தி மற்றும் பால் உற்பத்தி என்பவற்றை மேம்படுத்துவதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள் (இல. 1 ),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள் (இல. 1),— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 5 ஆம் இலக்கப் பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27 இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப் பெறுமாக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள் (இல. 2),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், 2023 நவம்பர் 13 ஆம் திகதி, திங்கட்கிழமை சபை அமர்வு தினமாக இருக்குமாக.

4.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள் (இல. 2),— 2023 நவம்பர் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 15 ஆம் திகதி புதன்கிழமை, 16 ஆம் திகதி வியாழக்கிழமை, 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, 18 ஆம் திகதி சனிக்கிழமை, 20 ஆம் திகதி திங்கட்கிழமை மற்றும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆகிய நாட்கள் "ஒதுக்கீட்டுச்" சட்டமூலம் (2024) இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களாகுமாக.

5.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள் (இல. 3),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 75(2) இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், "ஒதுக்கீட்டுச்" சட்டமூலம் (2024) இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களான 2023 நவம்பர் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் 16 ஆம் திகதி வியாழக்கிழமை வரையும் 18 ஆம் திகதி சனிக்கிழமை முதல் 20 ஆம் திகதி திங்கட்கிழமை வரையுமான நாட்களில் சபை அமர்வு நேரங்கள் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 6.30 மணி வரை இருக்குமாக. பி.ப. 6.00 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் 8(5) ஆம் மற்றும் (6) ஆம் பந்திகள் தொழிற்படுமாக. பி.ப. 6.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

6.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள் (இல. 4),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 75(2) இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், "ஒதுக்கீட்டுச்" சட்டமூலம் (2024) இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாளான 2023 நவம்பர் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சபை அமர்வு நேரங்கள் மு.ப. 9.30 மணி பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 6.30 மணி வரை இருக்குமாக. பி.ப. 6.00 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் 8(5) ஆம் மற்றும் (6) ஆம் பந்திகள் தொழிற்படுமாக. பி.ப. 6.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

7.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள் (இல. 5),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 75(2) இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், "ஒதுக்கீட்டுச்" சட்டமூலம் (2024) இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட தினமாகிய 2023 நவம்பர் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 6.00 மணி வரை இருக்குமாக. பி.ப. 6.00 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

8.

கௌரவ சாரதீ துஷ்மந்த,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"என் கனவு யாழ் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

9.

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"எஸ் ஓ எஸ் சிறுவர் கிராம இலங்கை அமைப்பினைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14(2) ஆம் பிரிவின் கீழ் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரின் உடன்பாட்டுடன் பதில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 யூலை 21 ஆம் திகதிய 2341/63 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.10.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 ஆகஸ்ட் 29 ஆம் திகதிய 2347/08 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.10.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 27, 36, 37, 39, 40 மற்றும் 64 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 71 ஆம் பிரிவின் கீழ் கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவினதும் இயைபான ஒழுங்குபடுத்தும் அதிகாரிகளினதும் கலந்தாலோசனையுடன், முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 யூலை 07 ஆம் திகதிய 2339/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.09.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— குறைநிரப்புத் தொகை,— செலவினத் தலைப்பு 241 - நிகழ்ச்சித்திட்டம் 01 — †2023 சனவரி 01 ஆம் திகதியில் ஆரம்பமாகி 2023 டிசெம்பர் 31 ஆம் திகதியில் நிறைவடைகின்ற நிதி ஆண்டின் பயன்பாட்டிற்காக, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான வேறேதேனும் நிதி அல்லது தொகை அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் விருப்பின் பேரில் அரசாங்கத்தினால் பெறப்பட்ட எந்தவொரு கடன் தொகையிலிருந்தும் ரூபா இருநூற்று முப்பத்தொரு பில்லியன் ஐநூறு மில்லியனை (ரூபா 231,500,000,000) விஞ்சாத மேலதிக குறைமதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட வேண்டுமென்றும் அத்தகைய தொகை இங்கே அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு செலவிடப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக:-

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| **செலவினத் தலைப்பு** | - 241 | பொதுத் தொழில்முயற்சிகள் திணைக்களம் | |
| **நிகழ்ச்சித்திட்டம்** | - 01 | தொழிற்பாட்டுச் செயற்பாடுகள் | |
| | | மூலதனச் செலவினம் | ரூ. 231,500,000,000 |
| | | **மொத்தச் செலவினம்** | **ரூ. 231,500,000,000** |

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2023 ஒக்தோபர் 17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க.

5.

பா. 71/2023

கௌரவ சஜித் பிரேமதாச,— ஊழல்மிக்க ஸ்ரீ லங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் உள்ளிட்ட உத்தியோகத்தர் குழுவை நீக்குவதற்கான தீர்மானம்,— இலங்கையின் கிரிக்கெட் விளையாட்டின் முன்னேற்றத்திற்காக, ஊழல்மிக்க தற்போதைய ஸ்ரீ லங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் உள்ளிட்ட உத்தியோகத்தர் குழு உடனடியாக பதவி விலக வேண்டுமெனவும்; ஊழலின்றி கிரிக்கெட் நிருவாகத்தை வெளிப்படைத்தன்மையுடன் கொண்டு நடாத்துவதற்கு கிரிக்கெட் நிருவாகத்திற்காக புதிய சட்டக் கட்டமைப்பொன்று பாராளுமன்ற சட்டமொன்றாக நிறைவேற்றப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

6.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

7.

பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

8.

மாகாணசபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*9.

கலஹா பத்ரவதி தேசிய பிக்குமார் பராமரிப்பு நிலைய நம்பிக்கைப்பொறுப்பு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2023 நவம்பர் 08) [1].

*11.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (188 ஆம் அத்தியாயமான) 1940 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் 46 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 47(1) ஆம் பிரிவின் கீழ் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் 2023 மே 25 ஆம் திகதி ஆக்கப்பட்டதும் 2023.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

பிரிவிடல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.

சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*14.

நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*15.

ஒதுக்கீடு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*16.

நிதிச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*17.

தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*18.

தேசிய நீரளவை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*19.

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*20.

கப்பற்றொழில் முகவர்களுக்கு, சரக்கனுப்புநர்க்கு, கலன்செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*21.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிகள்,— (276 ஆம் அத்தியாயமான) கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவையினால் ஆக்கப்பட்டு, 2023 மே 15 ஆம் திகதிய 2332/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.07.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*22

விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்,— விளையாட்டுக்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 41 ஆம் பிரிவின் கீழ் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளை உள்ளடக்கிய, 2022 மே 27 ஆம் திகதிய 2281/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலை இரத்துச் செய்து 2022 செப்டெம்பர் 08 ஆம் திகதிய 2296/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.10.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*23.

விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்,— விளையாட்டுக்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 41 ஆம் பிரிவின் கீழ் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 நவம்பர் 05 ஆம் திகதிய 2304/88 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.10.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*24.

விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்,— விளையாட்டுக்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 41 ஆம் பிரிவின் கீழ் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 டிசம்பர் 14 ஆம் திகதிய 2310/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.10.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*25.

விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்,— விளையாட்டுக்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 4),— 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் 18 மற்றும் 19 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 41 ஆம் பிரிவின் கீழ் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 டிசம்பர் 14 ஆம் திகதிய 2310/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.10.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*26.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 மார்ச் 24 ஆம் திகதிய 2324/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*27.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 09 ஆம் திகதிய 2296/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

28.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

வைட் றோஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

மனித உரிமைகள் அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

சமாதானம், கல்வி வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தியிற்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

அவசரகால பொதுச் சுகாதாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

கிழக்கு மீளெழுச்சி அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

சமாதி சுகாதார சேவைகள், சுற்றாடல், விவசாய, கலாசார மற்றும் விளையாட்டு நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

தென்னிலங்கை மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தலைமைத்துவப் பயிற்சிபீடம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

40.

சஹன சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

41.

சமாதி தியான மன்றும் யோகாசன நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

42.

றுஹுணு உதானய அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

43.
“மாத்தறைப் பருவம்” அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

44.
இலங்கை காப்புறுதி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

45.
விவாக (பொது) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

46.
முஸ்லிம் திருமணம், மணநீக்கம் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

47.
இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

48.
திருமணப் பதிவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

49.
திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயது சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

50.
தொழில் வல்லுனர்களின் சமூக சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

51.
இலங்கை மருந்தியல் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

52.
இலங்கை பட்டயக் கப்பல்தரகர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

53.
தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

54.
தெதிகம ஸ்ரீ மைத்திரீ பிரக்ஞார்த்த பௌத்த கல்வி தஹம் சபாவ (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] “சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---